## சுருக்கம்

பணிக்குழு – தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி – பாதாளசாக்கடைத் திட்டம் – திட்டப் பணிகள் – பொறியியல் பிரிவில் கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிக்கக் கோருதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை

**அரசாணை(பத்தாண்டு) எண்.438** **நாள் : 30 .09.2009.**

**படிக்கப்பட்டது :**

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.36030/2008/எப்.1, நாள் 15.07.2008, 06.01.09 மற்றும் 08.06.09.

----

**ஆணை :-**

திண்டுக்கல், அம்பத்தூர், காஞ்சிபுரம் ஆகிய நகராட்சிப் பகுதிகளிலும், வேலூர் மற்றும் ஈரோடு ஆகிய மாநகராட்சிப் பகுதிகளிலும் பாதாள சாக்கடை புனரமைப்பு திட்டப் பணிகளுக்காக தமிழ் நாடு நகர்புர மேம்பாடு திட்டம் III –ம் மற்றும் kfw line of credit –ன் கீழ் ரூ.315.11 கோடி செலவில் நிறைவேற்ற பின்வரும் வகையில் நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

| நகரம் | அரசாணை எண் மற்றும் தேதி | திட்ட செலவினம் ரூபாய் (கோடியில்) |
|---|---|---|
| திண்டுக்கல் | அரசாணை (ப) எண்.400, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23.09.05. | 23.76 |
| அம்பத்தூர் | அரசு ஆணை (2ப) எண்.98, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.11.01. | 39.60 |
| காஞ்சிபுரம் | அரசு ஆணை (3ப) எண்.31, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 18.08.04. | 12.59 |
| வேலூர் | அரசு ஆணை (ப) எண்.19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.01.06. | 30.00 |
| ஈரோடு | அரசு ஆணை நிலை எண்.249, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11.12.08. | 209.22 |
| | மொத்தம் | 315.17 |

2. நகராட்சி நிர்வாக இயக்குநர் தமது அறிக்கையில் சாதாரணமாக இவ்வகையான திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம் அல்லது சென்னை குடிநீர் வாரியம் போன்ற முகமைகள் மூலமாகவோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளால் தனியார் தொழில்நுட்ப நிறுவனங்களை திட்ட மேலாண்மை ஆலோசகர்களாக நியமிப்பதன் மூலமாக செயல்படுத்தப்படுவது வழக்கம் என்றும், ஆனால் இவ்வாறான திட்ட மேலாண்மை ஆலோசகர் நியமனம் பல்வேறு காரணங்களால் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்றும் (உதாரணமாக திண்டுக்கல்லில்) கூறி உள்ளார். மேலும், அவர்களுக்கு தரப்படும் ஆலோசனைக் கட்டணமும் மிக அதிகமாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். எனவே, JNNURM திட்டக் கட்டுமானபணிகளை செயல்படுத்த தனியே திட்ட செயலாக்க அலகுகள் (Project Implementation Units) ஏற்படுத்துவது என்று அரசு அளவில் முடிவு எடுக்கப்பட்டது என்றும் அவ்வாறு அமைக்கப்பட்ட திட்ட செயலாக்க பிரிவுகள் நல்ல முறையில் இயங்குகின்றன என்றும், அவற்றிற்கு ஆகும் செலவினம் தனியார் திட்ட மேலாண்மை ஆலோசகர்கட்கு தரப்படும் கட்டணங்களை விடக்குறைவாக உள்ளது என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும், JNNURM திட்டங்களுக்கான இத்தகைய திட்ட செயலாக்க பிரிவுகள் நல்ல முறையில் வெற்றிகரமாக இயங்குவதைக் கருத்தில் கொண்டு தற்போது மேற்குறித்த 5 நகர்புர பாதாள சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்த தனி திட்ட செயலாக்க பிரிவுகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும், நகராட்சி நிர்வாக இயக்குநர் கூறியுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது அறிக்கையில் பாதாள சாக்கடைத் திட்டங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பே செயலாக்குவதால் தற்போது அங்குள்ள தொழில்நுட்ப பணியாளர்கள் போதாது என்றும் எனவே, அவற்றுக்கு திட்ட செயலாக்க பிரிவுகள் ஏற்படுத்தி புதிய பணியிடங்கள் ஏற்படுத்த வேண்டும் என்றும் இதன்மூலம் பாதாள சாக்கடை திட்ட கட்டுமான அமைப்புகளை பராமரிக்கத் தேவையான பணி அனுபவம் நகராட்சி தொழில்நுட்ப பணியாளர்களுக்குக் கிடைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். இதற்கென பொறியாளர் தலைமையிலான மொத்தம் 80 எண்ணிக்கையிலான பல்வேறு தற்காலிகப் பதவிகளை ஏற்படுத்துமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேற்காணும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்துருவை அரசு மிக கவனமாக பரிசீலித்து, நான்கு நகர்புர (ஈரோடு, திண்டுக்கல், வேலூர் மற்றும் காஞ்சிபுரம்) பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்த அமைக்கப்பட உள்ள திட்ட செயலாக்க அலகிற்கு தற்காலிக தொழில்நுட்பப் பணியிடங்கள் ஏற்படுத்தும் கருத்துருவை ஏற்று பின்வருமாறு ஆணையிடுகிறது :

(அ) அம்பத்தூர் நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம், பகுதி I சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியத்திடம் வைப்புப் பணியாக (Deposit Work) ஒப்படைக்கப்பட உள்ளதால் அம்பத்தூரை தவிர்த்து திண்டுக்கல், காஞ்சிபுரம், வேலூர் மற்றும் ஈரோடு ஆகிய 4 நகர்புர பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயலாக்கம் செய்ய திட்ட செயலாக்க அலகு ( Project Implementation Units ) ஏற்படுத்தலாம். இதன் பொருட்டு இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ளபடி 69 எண்ணிக்கையிலான பல்வேறு தொழில்நுட்ப பணியாளர் பணியிடங்கள் தற்காலிமாக இத்திட்டப்பணி முடியும் வரை உருவாக்கப்படுகிறது.

(ஆ) இதற்கென தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம் / சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் ஆகியவற்றிலிருந்தோ அல்லது அவற்றிலிருந்து ஒய்வு பெற்ற தலைமை பொறியாளர் / கண்காணிப்பு பொறியாளர் / செயற் பொறியாளரை ஒப்பந்த அடிப்படையிலோ திட்டப் பொறியாளர் (Project Engineer) ஆக நியமிக்கலாம். ஏனைய தொழில் நுட்ப பணியாளர்களை நகராட்சி பொறியியல் பணியிலிருந்து பதவி உயர்வு / மறு பணியமர்வு மூலம் நிரப்பலாம். புள்ளி விபர குறிப்பாளர் / ஸ்டேனோ / தட்டச்சர் பதவிகள் தொகுப்பூதிய அடிப்படையில் நியமித்தல் வேண்டும்.

(இ) இப்பதவிகளுக்கான சம்பளம் முதலான செலவை பாதாள சாக்கடைத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட மேற்பார்வைக் கட்டணத்தில் இருந்து ஈடுகட்டவேண்டும். அது போதுமானதாக இல்லாத பட்சத்தில் கூடுதல் செலவை நகராட்சிகள் தத்தம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும்.

(ஈ) தற்போது திண்டுக்கல்லில் இயங்கி வரும் திட்ட மேலாண்மை ஆலோசகர் முறை அவர்களது ஒப்பந்தம் முடிவுக்கு வரும் 30.11.09 அன்று அல்லது இந்நேர்வில் பேசப்படும் திட்ட செயலாக்க அலகு (Project Implementation Unit) நியமிக்கப்படும் நாள், இதில் எது முன்னரோ அப்போது முடிவுக்குக் கொண்டு வரப்படும்

5. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அ.சா.கு.எண்.2632/FS (P)/09, நாள் 21.09.09 வெளியிடப்படுகிறது.

**/ஆளுநரின் ஆணைப்படி/**

**நிரஞ்சன் மார்டி**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 5.
ஆணையர், திண்டுக்கல் மற்றும் காஞ்சிபுரம் நகராட்சிகள்.
ஆணையர், வேலூர் மற்றும் ஈரோடு மாநகராட்சிகள்.

நகல்:
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு துணைமுதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின்
தனிச் செயலாளர், சென்னை–9.
இயக்குநர், உள்ளாட்சி தணிக்கைத் துறை, சென்னை – 108.
நிதித்துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) மற்றும் (மா.ந.6) துறை,
சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு.

**/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

**பிரிவு அலுவலர்**

## இணைப்பு

### அரசாணை (பத்தாண்டு) 438 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 30.09..2009

நான்கு உள்ளாட்சி பகுதிகளில் (ஈரோடு, திண்டுக்கல், வேலூர் மற்றும் காஞ்சிபுரம்) பாதாளச்சாக்கடைத் திட்டம் பணிகளுக்கு திட்டம் செயலாக்க அலகு ( P I U) ஏற்படுத்துதல்.

(ரூபாய் கோடியில்)

| வ. எ.ண். | நகராட்சி / மாநகராட்சி பெயர் | திட்டம் பணிகளின் செலவினம் (ரூபாய் கோடியில்) | திட்டப் பணிக் காலம் | திட்டம் செயலாக்க அலகிற்குத் ( P I U ) தேவையான பணியிடங்கள் | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தலைமை கண்காணிப்பு பொறியாளர். CE /SF | செயற் பொறியாளர். E E | உதவி செயற் பொறியாளர்A EE | உதவி பொறியாளர் A E | முதுநிலை வரைவாளர் Sr d.man | வரைவாளர் D.Man | தொழில்நுட்ப (TA / wi) உதவியாளர்/ பணி ஆ;யவாளர்;ா. | கணக்கு அலுவலர் Acc Of/ கணக்காளர் Acct | உதவியாளர் Asst | புள்ளி விவர குறிப்பாளர் /சுருக்கெழுத்து / தட்டச்சர். | மொத்தம் ( Total ) | திட்ட பணிகாலத்தில் பணியாளர்களு.க்கு உள்ள மொத்த சம்பளம் (ரூபாய் கோடியில்) | திட்ட மதிப்பீடில் கண்காணிப்பு பணிகளுக்கு ஒதுக்கப்பட தொகை (ரூபாய் கோடியில்) | திட்டப் பணிகளில் பணியாளர் சம்பளச் சதவீதம் | குறிப்புரை |
| 1 | ஈரோடு | 209.22 | 36 | 1 | 2 | 4 | 8 | 1 | 1 | 8 | 1 | 1 | 1 | 28 | 2.91 | 9.71 | 1.39 | |
| 2 | திண்டுக்கல் | 38.83 | 18 | – | 1 | 2 | 4 | – | 1 | 4 | 1 | 1 | 1 | 15 | 0.73 | 0.58 | 1.88 | |
| 3 | வேலூர் | 35.00 | 24 | – | 1 | 3 | 4 | – | 1 | 4 | 1 | 1 | 1 | 16 | 1.06 | 0.6 | 3.03 | |
| 4. | காஞ்சிபுரம் | 12.00 | 18 | – | 1 | 1 | 2 | – | 1 | 3 | – | 1 | 1 | 10 | 0.46 | 0.25 | 3.83 | |
| | மொத்தம் | 295.05 | 96 | 1 | 5 | 10 | 18 | 1 | 4 | 19 | 3 | 4 | 4 | 69 | 5.16 | 11.14 | 1.75 | |

நிரஞ்சன் மார்டி
அரசுச் செயலாளர்

/ உண்மை நகல் /

பிரிவு அலுவலர்